**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**DV.No.12/2024**

**PW.1**

**நாள்: 25.05.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஜோதி கமல பிரபா | வயது | |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை;</u>**

11. எனக்கு ஆக்சைட்டி பிரச்சனை உள்ளதாக என்னுடைய மனுவில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நாங்கள் சந்திக்க சென்ற மனநல மருத்துவர் எனக்கு கோபியம் என்ற மருந்தை பரிந்துரைத்தார் என்றால் சரியல்ல. ஆக்சிடால் என்ற மருந்தை தான் எனக்கு பரிந்துரைத்தார். எதிர்மனுதாரருக்கும் சேர்த்து தான் மருத்துவர் மருந்து கொடுத்ததாக நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். நான் பல தடவை தற்கொலைக்கு முயன்றுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவர் பரிந்துரைத்த அந்த மருந்தை நான் உட்கொள்ளாத நாட்களில் அதிகமாக ஆபாச வார்த்தைகளில் பேசுவேன் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் சந்தித்த மோகன்ராஜ் மனநல மருத்துவரை தவிர அதன்பிறகும் நான் தனிப்பட்ட முறையில் வேறு மனநல மருத்துவரையும் தற்போது வரை பார்த்து வருகிறேன் என்றால் நான் தற்போது வரை மனநல மருத்துவர் மோகன்ராஜ் மட்டும் தான் பார்த்து வருகிறேன்.

12. எனக்கு மருத்துவர் ரெய்சல் ரெபேகா என்பவரை எனக்கு தெரியாதா என்றால் அவரை நான் என்னுடைய ஒர்க் ஷாப்பில் சந்தித்துள்ளேன் மற்றபடி நான் அவரிடம் சிகிச்சைக்காக செல்லவில்லை. உடல் நலத்திற்காக ஆயுர்வேத சிகிச்சைக்காக தான் அவரிடம் சென்றேன். எனக்கு ஜெயஸ்ரீ சத்தியமூர்த்தி என்பவரை தெரியுமா என்றால் அவரையும் எனக்கு ஒர்க் ஷாப்பில் தான் தெரியும். அண்ணா சாலையில் உள்ள அவருடைய மெரியட் ஓட்டலில் நான் ரூ.30,000/–செலுத்தி சிகிச்சைக்காக சென்றேன் என்றால் இல்லை. நான் அவருக்கு ரூ.30,000/– செலுத்தியது உண்மையா என்றால் ஆமாம். என்னுடைய படிப்பிற்காக செலுத்தினேன். என்னுடைய மனுவின் பத்தி 16 ல் எதிர் மனுதாரர் என்னுடைய பெற்றோருக்கு போன் செய்து நான் நல்ல மனநிலையில் இல்லை என்று சொன்னதாகவும், எனக்கு உரிய அறிவுரை வழங்கும்படி அவர் கேட்டுக் கொண்டதாகவும் நான் என்னுடைய பெற்றோருக்கு திரும்பத் திரும்ப போன் செய்து எதிர்மனுதாரர் என்னை தொடர்ந்து துன்புறுத்துவதை தவிர்ப்பதற்காக என் அம்மா வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி நான் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

13. எதிர் மனுதாரர் என்னை உடல் ரீதியாக துன்புறுத்தி விட்டு என்னுடைய பெற்றோருக்கு அவரே முதலில் போன் செய்து பேசுவார். அதுபோல அவர் தொடர்ந்து அது போன்று என் பெற்றோருக்கு போன் செய்ததால் தான் என் பெற்றோர் எனக்கு போன் செய்து வந்து அழைத்துச் செல்லட்டுமா என்று கேட்டார்கள். என் பெற்றோர் அப்போது என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் முன்னிலையில் எதிர்மனுதாரர் என்னை தாக்கியதால் அவர்கள் என்னை என் அம்மாவிற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். அந்த சம்பவம் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடந்தது. பத்தி 18 ல்

நான் எதிர் மனுதாரர் 2020 வருட கடைசியில் இரண்டு மது பாட்டில்களில் குடித்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் அந்த இரண்டு மது பாட்டில்களையும் நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து தான் மதுக்கடைக்கு சென்று வாங்கினோம் என்றாலும் அதில் ஒரு பாட்டிலை என் விருப்பப்படி Schampine என்ற மதுபானத்தை நான் வாங்கினேன் என்றால் எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை.

14. நான் குறிப்பிடும் காலத்தில் நான் மருந்துகள் உட்கொண்டு வந்ததாலும் அவ்வாறு நான் மதுபானம் அருந்தினால் அது என் உடல் நலத்திற்கும் தீங்கை ஏற்படுத்தும். அன்றைய தினம் நானும் குழந்தை மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய மூவரும் கடற்கரைக்கு சென்று விட்டு வரும் வழியில் எதிர்மனுதாரர் எங்களை காரில் விட்டுவிட்டு அவர்தான் மதுக்கடைக்கு சென்றார்.அன்று நள்ளிரவு 12.30 மணிவரை நானும் அவருடன் தான் மது அருந்தினேன் என்றால் சரியல்ல. (**மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மேற்கண்ட கேள்விகள் சம்பந்தமாக எதிர்மனுதாரரின் எதுரையில் எவ்வித வாதுரைகளும் இல்லை என்பதால் பதிவு செய்யக்கூடாது என ஆட்சேபனைக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டு மேற்கண்ட கேள்வி பதிவு செய்யப்படுகிறது**)

15. அதன் தொடர்ச்சியாக அன்று காலை எதிர்மனுதாரர் பூத்தொட்டியை என்னுடைய தலையில் போட்டு உடைத்து விட்டார் என்றும் அதன் காரணமாக என்னால் மூச்சு விட முடியவில்லை என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன் எதிர்மனுதாரர் காலால் என்னுடைய மார்பின் மீது எட்டி உதைத்ததாகவும் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் நான் அது சம்பந்தமாக புகார் எதுவும்

கொடுக்கவில்லை என்றால் நான் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்தால் போலீசில் புகார் கொடுக்க முடியும் என்பதற்காக தான் ஆட்டோவை வரவழைத்து செல்ல இருந்தேன் அப்போது எதிர்மனுதாரரின் நண்பர் ஹரிஹர விஜயன் என்பவர் அங்கு வந்து எதுவாக இருந்தாலும் பேசிக் கொள்ளலாம் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டாம் என்றும் தனியார் மருத்துவமனைக்கு சென்றால்தான் நல்ல சிகிச்சை அளிப்பார்கள் என்று என்னை செட்டிநாடு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

16. அங்கு மருத்துவர் என்னை விசாரித்த போதும் என் கணவர் பூத்தொட்டியை எடுத்து என் தலையில் உடைத்ததை சொன்னேன். மருத்துவர் அந்த சம்பவம் சம்பந்தமாக காவல் துறைக்கு தெரிவிக்க வேண்டும் என்று சொன்னார் நானும் சம்மதம் தெரிவித்தேன் ஆனால் எதிர்மனுதாரரின் நண்பர் ஹரி தான் காவல்துறைக்கு தகவல் சொல்ல வேண்டாம் என்றும் அவர் போதையில் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் தான் அவரிடம் பேசுவதாக சொன்னார். எதிர்மனுதாரரின் நண்பர் புகார் கொடுப்பதை தடுத்ததால் தான் அன்றைய தினம் புகார் கொடுக்க முடியவில்லை. நான் இதுவரை எடுத்துக் கொண்ட சிகிச்சைகள் சம்பந்தமான அனைத்து மருத்துவ ஆவணங்களையும் பராமரிப்பது என் வழக்கம். ஆனால் எதிர்மனுதாரர் அந்த மருத்துவ ஆவணங்கள் அனைத்தையும் எடுத்து போட்டு விட்டார். அந்த மருத்துவ ஆவணத்தை பெற்று என்னால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா என்றால் நான் ஏற்கனவே அந்த ஆவணங்களை செய்வதற்கு முயற்சி செய்தேன் ஆனால் அந்த ஆவணங்களை என்னால் மருத்துவமனையில் இருந்து பெற முடியவில்லை. அதன் நகல் நீதிமன்றத்தின் தாக்கல் செய்துள்ளேன்.

17. அந்த சம்பவம் சம்பந்தமாக அதற்கு மறுநாளோ அல்லது அதற்கு பிந்தைய நாட்களிலோ புகார் அளிக்க நான் எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்றால் என்னுடைய உடல்நிலை காரணமாக என்னால் இரண்டு வாரங்களுக்கு நகர முடியாமல் இருந்தேன். அதனால் என்னால் புகார் கொடுக்க முடியவில்லை. அதன் பிறகு எதிர்மனுதாரர் என்னிடம் வந்து தான் தெரியாமல் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் அதற்காக மருத்துவரிடம் சென்று உரிய ஆலோசனை பெறுவதாகவும் என்னிடம் சொன்னார். நான் அவரிடம் பலமுறை தன்னுடன் வாழ விருப்பமிருந்தால் மனநல மருத்துவரை சந்தித்து உரிய ஆலோசனை பெற்று இருவரும் நல்லபடியாக வாழலாம் என்றும் இல்லையென்றால் எதிர்மனுதாரர் என்னை தாக்குவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாததால் எனக்கு மனமொத்த விவாகரத்து கொடுத்துவிடும்படியும் தான் இல்லையென்றால் தன்னுடைய குழந்தையின் எதிர்காலம் வீணாகிவிடும் என்பதை அவரிடம் சொன்னேன்.

18. அதற்கு எதிர்மனுதாரர் சரி என்பார் ஆனால் அதன் பிறகு அதனை செய்ய மாட்டார். எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.6 புகைப்படத்தில் தேதி நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னுடைய மனு பத்தி 22ல் எதிர்மனுதாரர் என்னை தாக்கியதாகவும் என்னை தற்காத்துக் கொள்வதற்காக நான் சமையலறைக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அன்றைய தினம் நான் எதிர்மனுதாரரை மிரட்டுவதற்காக தற்கொலை செய்து கொள்வதாக சொல்லித்தான் சமையலறைக்குச் சென்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை தாக்கியதால் தான் நான் சமையலறைக்கு சென்றேன். அதன் பிறகு எதிர்மனுதாரர் தொடர்ந்து சமையலறையின்

கதவை தட்டிக் கொண்டே இருந்தார். நான் திறக்காததால் எதிர்மனுதாரர் செக்யூரிட்டி இடம் சென்று நான் தற்கொலைக்கு முயற்சிப்பதாக பொய்யாக சொல்லி அவரையும் அழைத்து வந்தார்.

19. அந்த சம்பவம் ஏன் நடந்தது என்பது குறித்து என்னுடைய மனதில் நான் குறிப்பிடவில்லை என்றால் அவர் ஏன் என்னை அடித்தார் என்பது எனக்கு நினைவில்லை. எதிர்மனுதாரர் என்னை பலமுறை அவ்வாறு தாக்கியுள்ளதால் என்னால் அந்த சம்பவங்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை. நானும் எதிர் மனுதாரரும் சேர்ந்து ராஜபாளையத்தில் உள்ள மனநல மருத்துவரிடம் சிகிச்சைக்காக சென்றோம் என்றாலும் மருத்துவர் எதிர்மனுதாரருக்கும் மருந்தை கொடுத்தால் தான் நானும் சிகிச்சைக்கே ஒத்துழைப்பேன் என்பதால் எதிர்மனுதாரருக்கு வெறும் தூக்க மாத்திரையை மட்டும் தான் கொடுத்தார் என்றாலும் எனக்கு மனநலம் சம்பந்தமான மருந்துகளை கொடுத்தார் என்றால் (**மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மேற்கண்ட கேள்விகள் சம்பந்தமாக எதிர்மனுதாரரின் எதுரையில் எவ்வித வாதுரைகளும் இல்லை என்பதால் பதிவு செய்யக்கூடாது என ஆட்சேபனைக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டு மேற்கண்ட கேள்வி பதிவு செய்யப்படுகிறது**) நான் மருத்துவர் மோகன் ராஜை தான் பார்க்க அழைத்துச் சென்றேன். ஆனால் எதிர்மனுதாரருக்கு அவரிடம் சிகிச்சை பெறுவதில் நம்பிக்கை இல்லாததால் எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டுதான் பேரில் தான் நாங்கள் ராஜபாளையத்தில் உள்ள மருத்துவரிடம் சிகிச்சைக்காக சென்றோம்.

20. அங்கு சென்ற பிறகு எதிர்மனுதாரர் எனக்குத்தான் மனநோய் உள்ளதாய்

போன்று சித்தரித்து மருத்துவரிடம் சொன்னதாலும் மருத்துவரும் என்னை எவ்வித பரிசோதனையும் செய்யாமல் மருத்துவர் எனக்கு மருந்துகளை கொடுத்தார். உண்மையில் அவர் மனநல மருத்துவர் இல்லை. அவர் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரும் இல்லை. மருத்துவரும் எதிர்மனுதாரரும் அங்கு தங்கி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள் நான் அதற்கு மறுத்ததால் எதிர்மனுதாரர் லாட்ஜில் வைத்து என்னை அடித்தார். அங்கு சத்தம் அதிகமாக கேட்டதால் அந்த லாட்ஜின் உரிமையாளர்கள் எங்களை அங்கிருந்து காலி செய்ய சொல்லி விட்டார்கள் அதன் பிறகு எதிர்மனுதாரர் என்னை குழந்தையின் முன்பாகவும் அங்கிருந்த பொது மக்களின் முன்பாகவும் வைத்தே காரில் வைத்து அடித்தார்.

**வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI
Date: 2026.05.25 18:59:59 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.